Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, MARCH 26, 2024

செவ்வாய்க்கிழமை மார்ச் 26, 2024 | ஒளி: 09 கதிர் 220 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

# “பாட அறிவு போன்று போசாக்கும் அவசியம்”

**இந்த வருட பாடசாலை உணவு வழங்கல் திட்டத்தின் மூலம் 1.6 மில்லியன் மாணவர்கள் பயனடைந்துள்ளனர்**

**உள்நாட்டு உணவு கலாசாரத்தை கட்டியெழுப்புவதற்கான அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றும்**

நாட்டின் பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியை வழங்குவதற்காக அவர்களுக்கு பாடம் தொடர்பான அறிவை வழங்கி பரீட்சைகளுக்கு தயார்படுத்துவதைப் போன்றே அவர்களின் போசாக்கும் பாதுகாக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டினார்.

அத்துடன், செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட நவீன தொழில்நுட்ப அறிவை பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும் என்றும் தெரிவித்த ஜனாதிபதி, அதற்கமைவாக பாடசாலை கல்வி மற்றும் பரீட்சை முறைகளில் மாற்றம் ஏற்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாகவும் தொடர்ச்சி P2



மைத்திரியிடம்

# 6 மணிநேரம் விசாரணை

2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதியன்று இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை நடத்தியது யார் என்பது தனக்கு தெரியுமென முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட கருத்து தொடர்பில், குற்றப்புலனாய்வு (சி.ஐ.டி) பிரிவினர், அவரிடம் வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

சி.ஐ.டி தலைமையகத்துக்கு திங்கட்கிழமை (25) காலை 10.30க்கு அழைக்கப்பட்டார். அதனடிப்படையில், அங்குச் சென்ற மைத்திரிபால சிறிசேனவிடம், சுமார் 6 மணிநேரம் விசாரணைக்கு உட்படுத்தி வாக்குமூலம் பெற்றுக்கொண்டுள்ளனர்.

தொடர்ச்சி P2



# சு.க. முக்கியஸ்தர்கள் கொழும்புக்கு அழைப்பு

மிக முக்கிய தீர்மானங்களை எடுப்பதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அனைத்து உறுப்பினர்களையும் வார இறுதியில் கொழும்புக்கு அழைக்க முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள், செயற்குழு உறுப்பினர்கள், தொகுதி மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள், கட்சியின் அனைத்து அமைப்புகளின் பொறுப்பாளர்களும், கட்சியின் தலைமையகத்திற்கு அழை க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2



# காரின் மீதேறி கெப் விபத்து: நால்வர் காயம்

அம்பாறை மூவாங்கலை வீதியில் கெப் வண்டியும் காரொன்றும் மோதி விபத்துக்கு உள்ளானதில் நால்வர் காயமடைந்து அம்பாறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சி P2



பழுதடைந்த மீன்கள் அடங்கிய

# 102 கொள்கலன் விசாரணையை துரிதபடுத்த அறிவுறுத்தல்

பழுதடைந்த மீன்கள் அடங்கிய 102 கொள்கலன்களை நாட்டிற்குள் கொண்டுவந்த சம்பவம் குற்றவியல் விடமொன்றாகத் தோன்றுவதால், அது தொடர்பில் உடனடியாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்யுமாறு அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு (கோபா) நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு அண்மையில் ஆலோசனை வழங்கியது. அத்துடன், இது தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு இக்கூட்டத்தில் கலந்து கொண்ட குற்றப் புலனாய்வுத் திணைக்கள உயர் அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம்

# “ஜனாதிபதியும் அக்கறை காட்டுவதாக இல்லை”

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில், தற்போதைய ஜனாதிபதி கூட ஸ்கொட்லாந்து யார்ட் பொலிஸாரை அழைத்து விசாரணைகளை நடத்துவதாகக் கூறினாலும்,இதுவரையில் அதை நாடவே இல்லை. இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட பயங்கரவாதிகளைத் தேடுவதில் அவருக்கு விருப்பமில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# ‘டீ’ விலையில் மாற்றம்

இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலையை குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ள நிலையில், பால் தேநீரின் விலையையும் குறைக்க நடவடிக்கை எடுத்து வருவதாக அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



# “சிறுபான்மையின வாக்குகளே ஜனாதிபதியை தீர்மானிக்கும்”

**திகா தெரிவிப்பு: அமைச்சர்கள் தோற்பர்: எம்.பிக்கள் வெல்வர் என்கிறார்**

ஆ.ரமேஸ்

இந்த ஆண்டு தேர்தல்கள் ஆண்டாகும். இதில், ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுமாயின் மும்முனை போட்டி நிலவுமெனத் தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினரும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவருமான பழனி திகாம்பரம், ஜனாதிபதித் தேர்தலில், மலையக மக்கள் உள்ளிட்ட சிறுபான்மையினரின் வாக்குகளே ஜனாதிபதியை தீர்மானிக்கும் என்றார்.

தொடர்ச்சி P2



# களனி மாணவன் திடீர் மரணம்




களனி பல்கலைக்கழக மாணவர்கள் குழுவொன்று அதன் நிர்வாக கட்டிடத்திற்கு முன்பாக போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

களனி பல்கலைக்கழகத்தின் நான்காம் வருட மாணவர் ஒருவர், ஞாயிற்றுக்கிழமை (24) இரவு திடீர் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ச்சி P2

# பறவை கூடுகளுடன் வந்த மாணவர்கள்

**வனவிலங்கு மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பறவைக் கூடுகளை உடைப்பது, அகற்றுவது மற்றும் அழிப்பது சட்டப்படி குற்றமாகும்**



தம்புத்தேகம கல்வி வலயத்துக்குட்பட்ட ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் ஒருவர் பாடசாலை மாணவர்களுக்குப் பறவைக் கூடு ஒன்றைக் கொண்டு வருமாறு அனுப்பிய வட்ஸ்அப் தகவலுக்கு அமைய மறுநாள் நாற்பது மாணவர்கள் பறவைக் கூடுகளுடன் வகுப்புக்கு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பறவைக் கூடு கொண்டு வரச் சொல்லி சுமார் அறுபது மாணவர்களுக்கு வட்ஸ்அப் மூலம் ஆசிரியர் செய்தி அனுப்பியுள்ளார். இதனையடுத்து, சுமார் நாற்பது மாணவர்கள் பறவைக் கூடுகளுடன் பாடசாலைக்கு வந்துள்ளனர்.

தொடர்ச்சி P2

# 906 பேர் கைது

திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுவினரில் இருவர் கொட்டாஞ்சேனை மற்றும் பொரளை ஆகிய பகுதிகளில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

35 மற்றும் 38 வயதான இருவரே சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

வட்டுக்கோட்டை இளைஞன் படுகொலை

# பிரதான சூத்திரதாரி உட்பட மூவர் கைது

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை இளைஞனைக் கடத்தி படுகொலை செய்த குற்றச்சாட்டில், பிரதான சந்தேக நபர்களில் ஒருவர் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காரைநகர் பகுதிக்கு மார்ச் 11ஆம் திகதி சென்று விட்டு மனைவியுடன், மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்த இளைஞனை பொன்னாலை பாலத்திற்கு அருகில் உள்ள கடற்படை முகாமிற்கு முன்பாக வன்முறை கும்பல் கடத்தியது.

தம்பதியினரை வாகனத்தில் கடத்தி சென்று, இளைஞனை சித்திரவதைக்கு உள்ளாக்கி படுகொலை செய்த கும்பல் , மனைவியை சித்தன்கேணி பகுதியில் இறக்கி விட்டு தப்பி சென்றிருந்தது.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# “பாட அறிவு போன்று போசாக்கும் அவசியம்”

நாரஹேன்பிட்டி சுஜாதா மகளிர் கல்லூரியில் திங்கட்கிழமை (25) முற்பகல் இடம்பெற்ற “2024 பாடசாலை உணவுத் திட்டம்” ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டிலுள்ள தரம் 1-5 வரை உள்ள அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் பாடசாலையில் போசாக்கு உணவு வழங்குவதற்குக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

போசாக்கு நிபுணர்களின் பரிந்துரைகளைக் கருத்திற்கொண்டு மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு முன்னர் காலை 7.30 மணிக்கும் 8.30 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் இந்தக் காலை உணவை வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.



“ஆரோக்கியமான சுறுசுறுப்பான தலைமுறை” என்ற கருப்பொருளின் கீழ், 2024 ஆம் ஆண்டிற்கான பாடசாலை உணவுத் திட்டம், பாடசாலை மாணவர்களிடையே போசாக்குப் பிரச்சினைகளைக் குறைத்தல், மாணவர்களின் தினசரி பாடசாலை வருகையை அதிகரித்தல், நல்ல உணவுப் பழக்கம் மற்றும் சுகாதாரப் பழக்கங்களை மேம்படுத்துதல், கல்வி மேம்பாட்டு மட்டத்தை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன் இது உள்நாட்டு உணவு கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது.

9134 அரச பாடாசலைகளிலும், 100க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட அனைத்துப் பாடசாலைகளிலும் ஆரம்ப வகுப்புகளில் உள்ள அனைத்து மாணவர்களையும் உள்ளடக்கிய இந்த வருடப் பாடசாலை உணவு வழங்கல் திட்டத்தின் மூலம் 1.6 மில்லியன் மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இதற்காக ஒன்பது மாகாண சபைகளுக்கு அரசாங்கம் நேரடியாக 16,600 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளதுடன், உலக உணவுத் திட்டம் மற்றும் அமெரிக்காவின் விவசாயத் திணைக்களம் (USDA) உட்பட ஏனைய அமைப்புகளும் அனுசரணை வழங்குகின்றன.

# 6 மணிநேரம் விசாரணை

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில், மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் செய்யப்பட்ட முறைப்பாடு மற்றும் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் விடுத்துள்ள கட்டளைக்கு அமையவே, சி.ஐ.டியினர் விசாரணைக்கு அழைத்தனர்.

கண்டியில், வெள்ளிக்கிழமை (22) இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ராஜபக்ஷ குடும்பத்தினரே நாட்டைப் பாரிய பிரச்சினைக்கு இட்டுச் சென்றனர் என்றும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் அனைவரும் அறிந்துள்ளனர் என்றும் கூறியிருந்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் சூத்திரதாரிகள் தொடர்பில் தான் தகவலை வெளியிடும்போது அதனை மிகவும் இரகசியமாக வைத்திருக்க வேண்டியது நீதிபதிகளின் பொறுப்பாகும் என்றும் மைத்திரிபால சிறிசேன சுட்டிக்காட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சு.க. முக்கியஸ்தர்கள் கொழும்புக்கு அழைப்பு

இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வது கட்டாயம் என அனைத்து உறுப்பினர்களுக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் காலங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் புதிய கூட்டணி அமைக்கப்படவுள்ளதாகவும், அதன் செயற்பாடுகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



# “ஜனாதிபதியும் அக்கறை...

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான தொடர்பான விசாரணைகளை மறைத்து வருவதிலும் ஈடுபாடு காட்டாமையும் பலத்த சிக்கலையும் கேள்விகளையும் எழுப்பி நிற்கிறது. பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஏற்பட்டுள்ள பெரும் துயரம் காரணமாக நீதி நிலைநாட்டப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து பலரும் இன்று மீண்டும் பேசுகின்றனர். இந்த விடயத்தில், ஆங்காங்கே வெவ்வேறு கதைகளைச் சொல்வதை விடுத்து, வெளிப்படைத்தன்மையுடன் கூடிய வெளிப்படையான மற்றும் துல்லியமான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும். இதற்கு பொதுவான ஆணைக்குழுவொன்றை நியமிப்பதற்குப் பதிலாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிபுணர்களை ஈடுபடுத்துவது உகந்தது. வெளிப்படையான மற்றும் நேர்மையான விசாரணையை முன்னெடுப்பது காலத்தின் கட்டாயம் என்றார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 133ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் ஹம்பாந்தோட்டை, அம்பலாந்தோட்டை, கிவுல கனிஷ்ட வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு திங்கட்கிழமை (25) இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், எந்தவொரு நபரையும் பாதுகாக்க வேண்டிய தேவை ஐக்கிய மக்கள் சக்திக்கு இல்லாததால் நேர்மையான மற்றும் வெளிப்படையான விசாரணையை நாம் மேற்கொள்வோம். உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் சேதமாக்கப்பட்ட தேவாலயங்களைப் புனரமைப்பதில் முக்கிய பங்காற்றியவன் என்ற வகையில், இந்த வெறுக்கத்தக்கப் பயங்கரவாதத் தாக்குதலில் தொடர்புடையவர்களைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தி அவர்களுக்கு அதிகபட்ச தண்டனையைப் பெற்றுக் கொடுப்பேன்.

அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளுக்குச் சுற்றுப்பயணங்களை ஏன் மேற்கொள்ளவில்லை என பலரும் கேட்கின்றனர். அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குச் செல்வதை விட நாட்டில் உள்ள 10,126 பாடசாலைகளுக்குச் சென்று அவர்களின் குறைபாடுகளை ஆராய்ந்து இந்நாட்டில் அரச கல்வியைப் பெறும் 41 இலட்சம் மாணவர்களுக்கு இயன்ற பக்க பலத்தை வழங்கி, இந்தக் குறைபாடுகளைத் தீர்த்து ஸ்மார்ட் பாடசாலைகளாக மாற்றுவதே தனக்கு முக்கியமான விடயமாக அமைவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், கல்லூரியின் நடனம் மற்றும் அரங்கேற்றங்கள் குழுவினருக்குத் தேவையான ஆடைகளைப் பெறுவதற்குத் தேவையான ஒரு இலட்சம் ரூபாய் நிதியையும் நன்கொடையாக வழங்கி வைத்தார்.

# 102 கொள்கலன்...

சீஷெல்ஸிலிருந்து தாய்லாந்து நோக்கிப் பயணித்த பழுதடைந்த மீன் கொள்கலன்களுடன் கூடிய கப்பல் கொழும்பு துறைமுகத்தின் ஊடாக நாட்டிற்குள் பிரவேசித்தமை தொடர்பில் கணக்காய்வு விசாரணையின் மூலம் தெரியவந்த விடயங்களை ஆராய்வதற்காக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு இராஜாங்க அமைச்சர் கௌரவ லசந்த அழகியவண்ண தலைமையில் கூடியபோது இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டது.

சீஷெல்ஸிலிருந்து தாய்லாந்து நோக்கி 102 மீன் கொள்கலன்களை (2700 மெட்ரிக் டொன்னுக்கும் மேல்) ஏற்றிச் சென்ற கப்பல் இலங்கைக்கு அருகில் தொழில்நுட்பக் கோளாறில் சிக்கியுள்ளது. கப்பலின் மின்சாரம் தடைப்பட்டதால் மீன்கள் பழுதடைந்ததாகத் தெரியவந்துள்ளது. இதன்படி, 2022.01.13ஆம் திகதி கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்ததாகவும், கப்பலின் திருத்தப்பணிகள் நிறைவடைந்த பின்னர் புறப்படுவதற்குப் பதிலாக, இந்த கொள்கலன்களை இலங்கைக்குப் பெற்றுக்கொண்டமையால் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் டபிள்யு.பி.சி. விக்ரமரத்ன இதன்போது குறிப்பிட்டார்.

அவசரநிலையின் போது கப்பலுக்கு ஏற்படும் கோளாறுகளுக்கு அருகிலுள்ள துறைமுகத்தில் சில வசதிகள் வழங்கப்படுகின்ற போதிலும் இலங்கை சுங்க கட்டளைச் சட்டத்தின்படி, “சேதமடைந்த துர்நாற்றம் வீசக்கூடிய, நுகர்வுக்குப் பொருத்தமற்ற மற்றும் நோயை உண்டாக்கும் மீன் வகைகள், தானியங்கள் மற்றும் பிற பொருட்கள் இறக்குமதி செய்தல் தடைசெய்யப்பட்டுள்ளன” என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் இந்த மீன்களை தரையிறக்கியமை மிகவும் சிக்கலுக்குரியது என அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இந்தப் பழுதடைந்த மீன்களை இந்நாட்டுக்கு இறக்குமதி செய்வது சட்டத்துக்கு முரண் என்பதால், சுங்கத்தால் நியமிக்கப்பட்ட சிரேஷ்ட சுங்க அதிகாரிகளைக் கொண்ட குழுவின் பரிந்துரையின் பேரில், இந்நாட்டின் கொள்வனவாளர் ஒருவரை இறக்குமதியாளராகப் பயன்படுத்தி புதிய CUSDEC அனுமதியைப் பெற்று இந்தக் கொள்கலன்களை இலங்கையில் தரையிறக்கியுள்ளதாக இதன்போது தெரியவந்தது. இறக்குமதி செய்யப்படாத கொள்கலன்களை இறக்குமதி எனக்காட்டி இவ்வாறு செய்வது மோசடி என்றும் இங்கு கலந்துரையாடப்பட்டது. மேலும், இறக்குமதியாக வழங்கப்பட்ட விலைப்பட்டியலில் 10.12.2021 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அது கப்பல் துறைமுகத்தை வந்தடைந்த 13.01.2022 இற்கு முந்தைய திகதி என்றும் அது சிக்கலானது எனவும் கணக்காய்வாளர் சுட்டிக்காட்டினார். எவ்வாறாயினும், சுங்கக் குழுவின் அறிக்கையின் பிரகாரம், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பரிந்துரையின் பேரில், இந்த மீன்களை இயற்கை உர உற்பத்திக்காக இறக்குமதி செய்வதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனம் விண்ணப்பித்து அதற்கான அனுமதியைப் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கு அமையப் பெற்றதாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகம் தெரிவித்தார்.

# காரின் மீதேறி...

ஹிகுராணையிலிருந்து அம்பாறை நோக்கி கெப் வண்டி சென்றதுடன், கார் வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்தது.

கெப் வண்டியின் டயர் ஒன்றில் காற்று இல்லாமற் போய்விட்டது. இதனையடுத்து சாரதியால் கட்டுப்படுத்த முடியாமல் போய், காரின் மேல் ஏற்றிவிட்டார் என அறியமுடிகின்றது.

இந்த சம்பவத்தில், கெப் வண்டியில் பயணித்த நால்வர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# “சிறுபான்மையின...

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க ஆகிய மூவருக்கு இடையில் கடுமையான போட்டி நிலவும் என்றார்.

வலப்பனை பிரதேசத்தில் இராகலை, வலப்பனை மற்றும் உடப்புஸ்ஸலாவ பிரதேச தொழிலாளர் தேசிய சங்க அங்கத்தவர்கள் உள்ளிட்ட மக்கள் சந்திப்பு இராகலையில் ஞாயிற்றுக்கிழமை (24) இடம்பெற்றது.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய திகாம்பரம்,

நாட்டில் 2019 இற்கு பின்னர் பொருளாதார பிரச்சினை ஏற்பட்டது. அந்த நிலைமை இன்னும் தொடர்கிறது. பொருளாதாரத்தை மேம்படுத்தும் திட்டம் இந்த அரசாங்கத்திடம் இல்லை. அரசாங்கம் பெற்றுக்கொண்ட கிட்டத்தட்ட நூறு பில்லியன் டொலர், கடன் மீள் செலுத்த வேண்டி உள்ளது. இன்னும் இந்த கடன் செலுத்துவதற்கு ஆரம்பிக்கப்படவில்லை என்றார். இந்தக்கடனை செலுத்த ஆரம்பித்தால் நாட்டில் பழையப்படி பொருளாதார பிரச்சினைகள் ஏற்படும் பெற்றோல், டீசல் உட்பட பொருட்களுக்கான பிரச்சினை வரும் என்றார்.

இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் உதயகுமார் உட்பட தொழிலாளர் தேசிய சங்க நிதி காரியதர்சி சோ.ஸ்ரீதரன் சங்கத்தின் இளைஞர் அணி தலைவர் எஸ்.சிவனேசன் ஆகியோருடன் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# ‘டீ’ விலையில் மாற்றம்

விலை குறைக்கப்பட்ட பால் மா சந்தைக்கு வந்த பின்னர், பால் தேநீரின் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்படும் என அதன் தலைவர் ஹர்ஷன ருக்ஷான் தெரிவித்துள்ளார்.

அதன்படி தற்போது 100 ரூபாயாக உள்ள பால் தேநீரின் விலை 90 ரூபாயாக குறையும்.

இதேவேளை, புறக்கோட்டையை அண்மித்த பகுதியில் பால்மா அல்லாமல் டின்பால் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் பால் தேநீர் தற்போது 60 முதல் 80 ரூபாய் வரை உள்ளதாக அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

# களனி மாணவன் திடீர் மரணம்

எவ்வாறாயினும், குறித்த மாணவனை வைத்தியசாலையில் அனுமதிக்க அம்பியூலன்ஸ் வசதியோ அல்லது வேறு வாகனமோ பல்கலைக்கழகத்தில் இல்லாத காரணத்தினால், அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டதாகப் பல்கலைக்கழக மாணவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, பல்கலைக்கழக நிர்வாக கட்டிடத்திற்கு முன்பாக சுமார் 150 மாணவர்கள் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

# பறவை கூடுகளுடன் வந்த மாணவர்கள்

பறவைக் கூட்டுடன் குழந்தைகளை வகுப்பறைக்கு அழைத்து வந்த பெற்றோர்கள் வகுப்பறையில் ஏராளமான பறவைக் கூடுகளைக் கண்டு ஆசிரியரின் செயலுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இயற்கைச் சூழலில் பறவைக் கூடுகளைக் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுப்பதற்குப் பதிலாக இவ்வாறு பறவைக் கூடுகளை அழிக்கக் கற்றுக் கொடுப்பது குறித்துப் பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தம்புத்தேகம பிரதேச செயலாளருக்கு பெற்றோர்கள் அறிவித்துள்ளனர். தம்புத்தேகம கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிப் பணிப்பாளர் உபாலிசேன இது தொடர்பில் ஆராயவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.



இதேவேளை, வனவிலங்கு மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பறவைக் கூடுகளை உடைப்பது, அகற்றுவது மற்றும் அழிப்பது சட்டப்படி குற்றமாகும் என சிரேஷ்ட சுற்றாடல் சட்டத்தரணி கலாநிதி ஜகத் குணவர்தன தெரிவித்துள்ளார்.

அந்தச் சட்டத்தின்படி பறவைக் கூண்டுகளும் பாதுகாக்கப்பட வேண்டியவை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பிரதான சூத்திரதாரி...

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வரும் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் ஏற்கெனவே ஆறு பேரைக் கைது செய்து, நீதிமன்றில் முற்படுத்தப்படுத்தினர். அவர்கள், 28ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அடையாள அணிவகுப்பின் போது , கொல்லப்பட்ட இளைஞனின் மனைவியால் இருவர் அடையாளம் காட்டப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் தொடர் விசாரணைகளை முன்னெடுத்து வரும் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் வவுனியா , ஒட்டுசுட்டான் மற்றும் கிளிநொச்சி பகுதிகளில் தலைமறைவாகி இருந்த பிரதான நபர்களில் ஒருவர் உள்ளிட்ட மூவரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ளவர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸார் அவர்களை மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதேவேளை, சந்தேக நபர்களுக்கு அடைக்கலம் கொடுத்த நபர்களுக்கு எதிராகவும் கடுமையான சட்ட நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுக்கவுள்ளனர்.

தேடப்படும் சந்தேகநபர்களுக்கு அடைக்கலம் கொடுப்பது சிறைத்தண்டனைக்கு உரிய குற்றமாகும். எனவே வட்டுக்கோட்டை சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு அடைக்கலம் கொடுத்துப் பாதுகாக்கும் நபர்கள் சந்தேகநபர்கள் குறித்து பொலிஸாருக்கு அறியத் தருமாறு பொ லிஸார் கோரியுள்ளனர்.

# முன்மொழி பத்திரமொன்றை முன்வைக்க தீர்மானம்



கட்டுமானத்துறையில் பணிபுரிபவர்களின் பிரச்சினைகளுக்கு விரைவாக தீர்வு காண்பதற்கான முன்மொழிவுகள் அடங்கிய விசேட அமைச்சரவை பத்திரமொன்றை அமைச்சரவையில் முன்வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைச்சரவைப் பத்திரத்தை தயாரிப்பதற்காக அமைச்சின் அதிகாரிகளைக் கொண்ட உயர்மட்டக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடி மற்றும் கோவிட் தொற்றுநோய் காரணமாகச் செலுத்த முடியாத ஒழுங்காகச் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து பற்றுச்சீட்டுகள் தொடர்பான கொடுப்பனவுகளை, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களும் தற்போது பூர்த்தி செய்துள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

அதன்படி, கடந்த வருடம் செலுத்தப்பட்ட பெறுமதி 12,501 மில்லியன் ரூபாவாகும்.

பொருளாதார நெருக்கடி மற்றும் கோவிட் தொற்று காரணமாக, இலங்கையின் கட்டுமானத் துறை கடும் பின்னடைவைச் சந்தித்ததுடன், இதன் காரணமாக, கட்டுமானத் துறையில் ஈடுபட்டுள்ள ஒப்பந்ததாரர்கள் மற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஜனாதிபதியின் விசேட கவனத்திற்குக் கொண்டுவந்ததையடுத்து, இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக நிதியமைச்சின் செயலாளர் தலைமையில் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இது தொடர்பான கொடுப்பனவு நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு அதற்கேற்ப நிலுவைத் தொகைகளைச் செலுத்துவதை நிறைவு செய்யும்.

கட்டுமான ஒப்பந்தங்களைப் புதுப்பிக்கும் போது விலை அதிகரிப்புக்குரிய கொடுப்பனவுகளை சில அரச நிறுவனங்கள் கொடுக்காமல் இருத்தல் மற்றும் கொடுப்பனவுகளைத் தாமதித்தல் போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான பிரேரணைகள் உத்தேச அமைச்சரவை பத்திரத்தில் உள்ளடக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.



தாடி, தலைமுடியால்

## வாகனத்தை இழுத்து சாதனை

யாழ்.-தென்மராட்சியைச் சேர்ந்த 60 வயதான செல்லையா திருச்செல்வம் தனது தாடியாலும் தலை முடியினாலும் 'ஏஷ் பட்டா' ரக வாகனத்தை 1,000 மீற்றர் தூரம் வரை இழுத்து சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

இந்நிகழ்வு, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் கொழும்பு காலி முகத்திடலில் ஞாயிற்றுக்கிழமை (24) காலை 10 மணிக்கு நடைபெற்றுள்ளது.

வாகனத்தை தனது தாடியாலும் முடியாலும் 1,000 மீற்றர் தூரத்திற்கு இழுத்து உலக சாதனையை நிகழ்த்துவதே திருச்செல்வனின் நோக்கமாக அமைந்ததுள்ளது.

அதற்கமைய 1,550 கிலோ கிராம் எடையுடைய ஏஷ் பட்டா ரக வாகனத்தை தாடியால் 500 மீற்றரும், தலை முடியால் 500 மீற்றரும் இழுத்து, திருச்செல்வம் அந்த உலக சாதனையைப் படைத்துள்ளார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் உலக சாதனைப் புத்தக நிறுவனப் பிரதிநிதிகள் சாதனை நிகழ்வை ஆரம்பித்து வைத்துள்ளனர். வாகனத்தை இழுத்துவந்த செல்லையா திருச்செல்வத்தை ஆரம்பம் முதல் சாதனையை நிலைநாட்டும் வரையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உற்சாகப்படுத்திக் கொண்டிருந்துள்ளார்.

இந்த நிகழ்வை Cholan Book of World Record (CBWR) நிறுவனத்தின் பிரதிநிதிகள் நேரடியாக அவதானித்து திருச்செல்வமின் சாதனையை அங்கீகரித்து பதக்கத்தையும், விருதையும், பட்டயத்தையும் வழங்கியுள்ளதுடன் அதை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கரங்களால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

உலக சாதனை நாயகனான செல்லையா திருச்செல்வம் கடந்த பத்தாண்டுகளாக தனது தலைமுடியாலும், தாடியாலும் வாகனங்களை இழுப்பது, தனது உடலின்மீது வாகனத்தை ஓடவிடுவது போன்ற சாதனைகளைச் செய்து வந்துள்ளதுடன் அண்மையில் சாவகச்சேரி பஸ் நிலையத்தருகில் 1,550 கிலோ கிராம் எடையுள்ள வாகனத்தை 1,500 மீற்றர் தூரத்தை 45 நிமிடங்களில் இழுத்து சாதனை படைத்துள்ளார்.

குறித்த வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்றது. இச்சாதனை மூலம் சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் செல்லையா திருச்செல்வனுடைய பெயரும் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.












## விபத்தில் சிக்கிய இளைஞர்கள்; ஒருவர் கவலைக்கிடம்

எச்.எம்.எம்.பர்ஸான்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீராவோடை பகுதியில் திங்கட்கிழமை (25) காலை 10.30. மணியளவில் பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில், ஒருவர் கவலைக்கிடமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஓட்டமாவடி - மீராவோடை ஊடாக மட்டக்களப்பு வைத்தியசாலைக்குப் பயணிகளை ஏற்றிச் செல்லும் இலங்கை போக்குவரத்து சபையின் வாழைச்சேனை கிளை பஸ் வண்டியில் மோட்டார் சைக்கிள் மோதி இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த வீதியால் மூன்று மோட்டார் சைக்கிளில் ஓட்டப்பந்தயத்தில் ஈடுபட்ட இளைஞர்களே இவ்விபத்தில் சிக்கியுள்ளனர்.

இதில், இருவர் படுகாயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குறித்த விபத்தில் காயமடைந்த ஒருவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றன.

## மதுபானசாலையை உடைத்து கொள்ளை

செ.தி.பெருமாள்



மஸ்கெலியா நகரில் உள்ள மதுபானசாலையை உடைத்து 131,600 ரூபாய் பணம் மற்றும் மதுபானம் என்பன திருடப்பட்டுள்ள சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (24) பதிவாகியுள்ளது.

மஸ்கெலியா நகரின் பிரதான வீதியில் அமைந்துள்ள வெளிநாட்டு மதுபானசாலையொன்றில் 131,600 ரூபாய் மற்றும் உள்ளூர் மதுபான போத்தல் ஒன்றும் களவாபட்டுள்ளதாக குறித்த மதுபானசாலையின் முகாமையாளர் மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதற்கமைய விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், மதுபானசாலையில் மற்றும் நகரில் உள்ள சி.சி.ரி.வி கேமராக்களை ஆய்வு செய்து பார்த்த போது, அதிகாலை 03.30 மணியளவில் குளிர் கோட், முகமூடி அணிந்து, கைகளைத் துணியால் மூடிய ஒருவர் மதுபான சாலையின் பூட்டை உடைத்துள்ளமை தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் மதுபானசாலையின் பூட்டை உடைப்பதற்குப் பயன்படுத்திய துணியை மதுபானசாலையின் உள்ளே வைத்துவிட்டுச் சென்றுள்ளதுடன், அதனூடாக மோப்ப நாயைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, மஸ்கெலியா தோட்டத்தின் மூடப்பட்ட தேயிலை தொழிற்சாலைக்கு அருகில் சென்று நின்றுள்ளது மோப்ப நாய்.

மேலும், இச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை இதுவரை கைது செய்யப்படவில்லை என தெரிவித்துள்ள மஸ்கெலியா பொலிஸார் இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஊடகவியலாளராக அடையாளப்படுத்தி பணம் மோசடி

எம்.றொசாந்த்



தன்னை ஊடகவியலாளராக அடையாளப்படுத்திக் கொண்டு பண மோசடியில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் ஞாயிற்றுக்கிழமை (24) கைது செய்யப்பட்டுள்ளார்.

கனடாவில் சந்தோஷ் நாராயணனின் மாபெரும் இசை நிகழ்வொன்று இடம்பெறவுள்ளதாகவும், அதற்காக இலங்கையில் இருந்து சில ஊடகவியலாளர்களை அழைத்துச் செல்ல உள்ளதாகவும் கூறி, அவ்வாறு அழைத்துச் செல்லப்படவுள்ள ஊடகவியலாளர்களுடன் ஊடகவியலாளராக உங்களையும் அழைத்துச் சென்று கனடாவில் இறக்கி விடுவதாக யாழ்ப்பாண இளைஞன் ஒருவரிடம் கூறியுள்ளார்.


அதற்காகச் சிலருக்குப் பணம் கொடுக்க வேண்டும் எனவும் ஊடக நிறுவனம் ஒன்றிடம் இருந்து ஊடகவியலாளர் என அடையாள அட்டையினை பெற்றுக்கொள்ள, அந்நிறுவனத்திற்கு ஒரு தொகை பணம் வழங்க வேண்டும் என கூறி இளைஞனிடம் இருந்து 43 இலட்சம் ரூபாய் பணத்தினை பெற்று, இளைஞனுக்கு ஊடக நிறுவனம் ஒன்றின் அடையாள அட்டையையும் வழங்கியுள்ளார்.

பணத்தினை பெற்று நீண்ட காலமாகியும் கனடாவில் சந்தோஷ் நாராயணனின் இசை நிகழ்வுக்கான ஏற்பாடுகள் எதுவும் நடைபெறுவதாக இளைஞன் அறியாத நிலையில், தனது பணத்தினை மீளத் தருமாறு கோரிய போது, சந்தேக நபர் இளைஞனின் தொடர்பைத் துண்டித்துள்ளார்.

அதனால், இது தொடர்பில் இளைஞன் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து, விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் தலைமறைவாகி இருந்த சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர். மேலும், இளைஞனுக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டையின் ஊடக நிறுவனத்தைச் சந்தேக நபரே நடாத்தி வருவதாகவும் அவர் பல்வேறு மோசடி சம்பவங்களில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

## தேயிலை செடிகளுக்குள் ஓடிய வெள்ளை கார்

ரஞ்சித் ராஜபக்ஷ



அதிவேகமாக வந்த காரொன்று வீதியை விட்டு விலகி, தேயிலை செடிகளுக்குள் புகுந்தோடி விபத்துக்கு உள்ளாகியுள்ளதாக திம்புள்ள-பத்தனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹட்டன்- நுவரெலியா பிரதான வீதியில் கொட்டகலை எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில், திங்கட்கிழமை (25) காலை 08 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொட்டகலையில் இருந்து ஹட்டன் நோக்கி கார் அதிவேகமாக செலுத்தப்பட்டுள்ளது. அப்போது நாயொன்று வீதியை கடக்க முட்பட்டுள்ள, நாயை காப்பாற்றும் முயற்சியால் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த கார் தேயிலை செடிகளுக்குள் சென்றுவிட்டது.

விபத்தின் போது, காரில் நான்கு பேர் இருந்தனர், அவர்களில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை எனத் தெரிவித் பொலிஸார் கார் பலத்த சேதமடைந்ததுள்ளது என்றனர்.

## மின்கம்பியில் சிக்கி தொழிலாளி உயிரிழப்பு

நாவலப்பிட்டியில் விவசாய தோட்டத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்சாரக் கம்பியில் சிக்கி இரண்டு பிள்ளைகளின் தந்தை உயிரிழந்துள்ளதாகத் தோட்ட நிர்வாக அதிகாரி மீது உறவினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.


மரக்கறி செய்கை நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்த நாவலப்பிட்டி- கிரேவ்ஹெட் தோட்டத்தில் வசித்து வந்த 49 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான சந்தியாகு செபஸ்டியன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

"உயிரிழந்த தனது தந்தை, ஞாயிற்றுக்கிழமை (24) காலை தோட்ட அதிகாரியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் தோட்ட வேலைக்குச் சென்றார்.

பின்னர் தனது தந்தைக்கு திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பிற்பகல் 3 மணியளவில் தோட்ட அதிகாரியால் தகவல் தரப்பட்டது.

வைத்தியசாலைக்குச் சென்றபோது, தனது தந்தையின் சடலம் வைத்தியசாலையின் பிரேத அறையிலிருந்து" என உயிரிழந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையின் மகள் நாவலப்பிட்டி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், மரக்கறிச் செய்கை நிலத்தைப் பாதுகாப்பதற்காகத் தோட்ட அதிகாரியால் மரக்கறிச் செய்கை நிலத்தில் சட்டவிரோதமாகப் போட்டிருந்த மின்சாரக் கம்பியில் சிக்கியே அவர் உயிரிழந்ததாக உறவினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.



# திருத்தங்கள் ஊடாக தேர்தலை ஒத்திவைக்க முயலக்கூடாது

மக்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்படுவதன் ஊடாகவே அந்நாட்டின் ஜனநாயகம் காப்பாற்றப்படுகின்றது. இல்லையேல், சர்வாதிகார ஆட்சியே அங்கு நடைபெறுகின்றது என்பதை யூகித்துக்கொள்ளமுடியும். ஏனெனில், மக்களின் அடிப்படை உரிமை, வாக்களிக்கும் உரிமையாகும்.

தற்போதைய ஜனாதிபதியின் கீழ், தேர்தலை எதிர்பார்க்கமுடியாது என்பதே பலருடைய கருத்தாகும். ஏனெனில், தன்னுடைய கட்சியிலும் சரி, அரசாங்கத்திலும் சரி, தேர்தலை அவர் உரிய நேரத்தில் நடத்தியதே இல்லை என்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதேபோல, உள்ளூராட்சி மன்ற, மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படாமல் இருக்கும் வகையில் முடிச்சு போட்டுவிட்டார் என்பர்.

இந்நிலையில்தான், தேர்தல் முறைமையில் திருத்தம் செய்வதற்கான யோசனை அண்மையில் அமைச்சரவையில் நிறைவேற்றப்பட்டது. சட்டத்தை வரைபு தயாரித்து ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடத் தீர்மானிக்கப்பட்டுள்ளன அதற்குக் கடுமையான எதிர்ப்பு கிளம்பியுள்ளது. அரசாங்கத்தின் பங்காளி கட்சிகளில் சில, நேரடியாகவே எதிர்த்துள்ளன.

தேர்தல் முறை திருத்தம் தொடர்பில் கலந்துரையாடல்களை நடத்துவது எமது அரசியல் கலாசாரத்தின் பிரபலமான பகுதியாகும். ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் சில உள்நோக்கங்களை நடைமுறைப்படுத்த விரும்பும்போது, நாட்டின் பொது மக்களுக்கு எடுத்துச் செல்லப்படும் தலைப்புகளில், தேர்தல் முறை திருத்தம் மிக முக்கியமான இடத்தைப் பெறுகிறது. அந்த விவாதங்கள் இன்னும் வெளியிடப்படவில்லை.

அது வெளியிடப்பட்டிருந்தால் இதுவரை நாட்டில் அனைத்து தேர்தல்களும் புதிய தேர்தல் முறைமைக்கு அமைவாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அப்படி நடக்கவில்லை.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட விகிதாச்சார வாக்களிப்பு முறையை மாற்றி தொகுதிகள் மட்டத்தில் கலப்பு முறையுடன் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் முறையை மீண்டும் ஏற்படுத்துவதற்கான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டு இரண்டு தசாப்தங்களாகின்றன.

ஆனால், அதற்கான அரசியலமைப்பு திருத்தத்திற்குத் தேவையான ஒப்புதலை மற்ற அரசியல் கட்சிகளிடம் இருந்து பெற எந்த அரசாங்கமும் போதிய முயற்சிகளை எடுக்கவில்லை. இந்தக் கருத்துக்களில் இருந்து இந்த ஆண்டு நடைபெறவுள்ள பிரதான தேசியத் தேர்தல்கள் தொடர்பில் பிரதான கட்சிகளின் தலைவர்கள் இன்னும் இணக்கப்பாட்டுக்கு வரவில்லை எனத் தெரிகிறது.

வாக்குரிமையைப் பயன்படுத்துவதில் பிரச்சினை ஏற்படும் வரை நாட்டு மக்களின் இறையாண்மையை இழுத்தடிக்க அனுமதிக்கக் கூடாது. இது நாட்டின் ஜனநாயகத்தில் மிகவும் எதிர்மறையான விளைவை ஏற்படுத்துகிறது. ஒரு நாட்டின் ஜனநாயகத்திற்குச் சவால் விடுவது அந்த நாட்டு மக்களின் உரிமைகளைப் பறிப்பதாகும். இறுதியில் நாட்டை அராஜகத்திற்கு இழுத்துச் செல்ல இது வழி வகுக்கும்.

ஒரு நாட்டில் தேசிய தேர்தல்கள் அந்த நாட்டின் அரசியலமைப்பில் உள்ள விதிகளின்படி நடத்தப்பட வேண்டும், தனிப்பட்ட அரசியல் தலைவர்களின் ரசனை மற்றும் விருப்பத்தின்படி அல்ல. இப்படிச் சிக்கலுக்குச் சென்ற நாடுகளுக்கு வேறு உதாரணம் தேவையில்லை. இலங்கை மட்டும் போதும்.




தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# அடுத்த சுற்றுக்கு தயாராகும் நமது பழைய நடிகர்கள்

**மொஹமட் பாதுஷான்**

பழைய கதைகளையே மாறுபட்ட வேடங்களில், புதிய பாணியில் நடித்துக் கொண்டு காலத்தை இழுத்துச் செல்வதற்கே பெருந்தேசிய தலைவர்கள் மற்றும் சிறுபான்மை தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகள் என்ற பழம்பெரும் நடிகர்கள் இன்னும் மனக்கணக்கு போட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இலங்கை அரசியலை எடுத்துக் கொண்டால் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல், ஐந்தாண்டுக்கு ஒருமுறை ஆட்சி மாற்றம், இடையில் அரசியலமைப்பு திருத்தங்கள், சட்டமூலங்கள், புதிய அரசியலமைப்பைக் கொண்டு வரப்போகின்றோம் என்ற அறிக்கைகள், 13ஆவது திருத்தம் பற்றிய வாதப் பிரதிவாதங்களே ஒரு காலச் சுழற்சியைப் போல மாறி மாறி வந்து கொண்டிருக்கின்றன.

அது போதாதென்று, கடந்த 10 வருடங்களில் இனவாதமும் சிங்கள மக்களைத் தூண்டக் கூடிய போலிப் பிரசாரங்களும், நீதியை நிலைநாட்டும் தோரணையிலான வழக்குகள் மற்றும் பயங்கரவாதத்தை மையமாகக் கொண்ட விவகாரங்களும் அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுவதைக் காண்கின்றோம்.

மக்களை கொன்றாவது, சதித்திட்டங்களை தீட்டியாவது அதிகாரத்தில் நிலைத்திருக்க வேண்டும் அல்லது ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்ற மனப்பாங்கு சிங்கள ஆட்சியாளர்களிடையே ஏற்பட்டுப் பல வருடங்களாயிற்று. இந்தியா, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகள் இந்த நிலைமைகளை தமக்குச் சாதகமாகக் கையாள முனைகின்றன.

கடந்த கால் நூற்றாண்டை எடுத்துக் கொண்டால் தேர்தல்கள், ஆட்சி மாற்றங்கள், புதுப்புது சட்டங்கள், அரசியலமைப்பு திருத்தங்கள், தேர்தல் முறைமை மாற்றங்கள், அரசியல் குழப்பங்கள், தாக்குதல்கள், உயிர்ப்பலிகள், வன்முறைகள், பிறகு மீண்டும் தேர்தல்கள், ஆட்சி மாற்றங்கள் இப்படித்தானே மாறிமாறி சுழன்று கொண்டிருக்கின்றோம்.

மூன்று தசாப்தகால இலங்கை அரசியலில் புதிதாக, மாற்றுச் சிந்தனை கொண்ட, முன்மாதிரியான எந்த ஆட்சியாளராவது வந்திருக்கின்றாரா? நல்ல சிந்தனையோடு வருகின்ற தேசிய மட்ட அரசியல்வாதிக்கு மட்டுமல்ல, அப்படியான பாராளுமன்ற தேர்தல் வேட்பாளருக்காவது மக்கள் வாக்களித்து அழகு பார்த்ததுண்டா? இல்லையென்றுதான் கூற வேண்டும்.

பெயர் குறிப்பிட்டு அடையாளப்படுத்தக் கூடிய நான்கைந்து குடும்பங்கள்தான் சுற்றிச்சுற்றி இலங்கை அரசியலரங்கின் அதிகார மையத்தைச் சுற்றிச் சுழன்று கொண்டே இருக்கின்றன. இடையில், சிறிசேனக்களும், அனுரகுமாரக்களும் வந்து போகின்றார்கள்.

இப்போது மீண்டும் நாடு ஒரு தேர்தலுக்காகத் தயாராகிக் கொண்டிருக்கின்றது. முதலில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றாலும், உடனடுத்ததாக பொதுத் தேர்தலும் நடைபெறுவதற்கான நிகழ்தகவுகள் அதிகமுள்ளன. தேசிய அரசியலில் அரசியல்வாதிகள் விடுகின்ற அறிக்கைகளும் நகர்வுகளும் தேர்தலொன்றுக்கான முன்னேற்பாடுகளைத் தெளிவாகக் கட்டியம் கூறுவதாக உள்ளன.

அதாவது இப்பத்தியில் நாம் மேலே குறிப்பிட்ட நிகழ்வுகள் மீண்டும் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மக்களின் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காகத் தேர்தல் நடத்த வேண்டும் என்று கூறுகின்றனர். சட்டமூலங்களை கொண்டு வரும் முயற்சிகள் இடம்பெறுகின்றன. தேர்தல் முறைமையை மாற்ற வேண்டும் என்ற குரல்களும் மீள ஒலிக்கத் தொடங்கியுள்ளன.

இப் பின்னணியில், கிட்டத்தட்டச் சொந்த செலவில் சூனியம் வைத்ததைப் போல, கோட்டபாய ஒரு புத்தகத்தை எழுதியிருக்கின்றார். மறுபுறத்தில், அந்த புத்தகத்தோடு தமக்குப் பெரிய உடன்பாடில்லை என்பது போலவும், நாட்டில் நடந்தவற்றைச் சரிவரப் புரிந்து கொண்டு செயற்படுவதைப் போலவும் பசிலும் மஹிந்தவும் கருத்து வெளியிடத் தொடங்கியுள்ளனர்.

இதற்கிடையில் ஏற்கெனவே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பற்றிய விசாரணைகள் இடம்பெற்ற வேளையில், தனக்குத் தெரிந்த உண்மைகளை எல்லாம் கூறியிராத அல்லது தனக்குத் தெரியாது என்ற கூறிய மைத்திரிபால சிறிசேன, இப்போது 'ஏப்ரல் தாக்குதலை நடத்தியது யார் என எனக்குத் தெரியும்' என்று பகிரங்கமாகச் சொல்லியுள்ளார்.

அதேவேளை, முன்னைய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தது மட்டுமன்றி, நாட்டின் உயர் பதவியைப் பொறுப்பேற்பதற்கான வாய்ப்புகள் வந்தபோது சில காரணங்களுக்காக அவற்றைத் தவிர்த்துக் கொண்ட சஜித் பிரேமதாச மீண்டும் உத்வேகமாகச் செயற்படத் தொடங்கியுள்ளார்.

இலங்கையில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குச் சர்வதேசத்தின் உதவி அவசியம் என்பதை அனுபவங்களின் ஊடாக கற்றுக்கொண்டுள்ள அனுரகுமார திசாநாயக்க வேறு ஒரு விதமான நகர்வைச் செய்து கொண்டிருப்பதைக் காண முடிகின்றது.

சமகாலத்தில், வடக்கு, கிழக்கு தமிழர் அரசியலில் தமிழ் பொது வேட்பாளர் பற்றிப் பேசப்படுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குலைந்து போனதால் 'தமது எம்.பி. பதவி புதுப்பிக்கப்படாது' என சில அரசியல்வாதிகள் உள்ளுக்குள் அச்சப்படுகின்ற சூழலில் புதிய கூட்டணிகள் அமைப்பது பற்றிய முயற்சிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

முஸ்லிம் அரசியல் தடுமாறிக் கொண்டிருக்கின்றது. தேர்தல் ஒன்று வரப்போகின்றது என்றால் இந்த தடுமாற்றம் ஏற்படுவது வழக்கமானதுதான். கல்விப் பாடங்களைத் தொடர்ச்சியாகப் படித்து, முன்கூட்டியே தயார் நிலையில் இல்லாத மாணவர்கள், பரீட்சை அறிவிக்கப்பட்டதும் தடுமாறிப் போவார்கள்.

பரீட்சையில் எதை எழுதுவது, எதைப் படிப்பது, அதற்குக் காலம் போதுமானதா, அப்படிப் படித்தால் சித்தியை உறுதிப்படுத்த முடியுமா? என்ற பல கேள்விகள் அவர்களை பதற்றத்திற்குள்ளாக்கும். அந்த நிலைமைதான் முஸ்லிம் தலைவர்கள், எம்.பிக்களுக்கு இப்போது ஏற்பட்டுள்ளது எனலாம்.

ஆக மொத்தத்தில், எல்லாவற்றையும் தொகுத்து நோக்கினால்... 2015இல், 2019 மற்றும் 2020இல் தேர்தலுக்கு முன்னர் நாடு இருந்த புள்ளியிலேயே கிட்டத்தட்ட இப்போது நாம் நிற்கின்றோம் என்று கூறலாம்.

அப்போது இடம்பெற்ற அதே சம்பவங்கள்தான் இப்போது இன்னுமொரு பாணியில், வேறு நுட்பங்களோடு புதிய காட்சிப்படுத்தல் ஊடாக மீளவும் இன்னுமொரு சுழற்சியில் இடம்பெறப் போகின்றன.

பழைய பல்லவியை எந்த ராகத்தில் பாடினால் மக்கள் மயங்குவார்கள் என்றுதான் பெரும்பான்மைக் கட்சிகளின் தலைமை வேட்பாளர்களும் தமிழ், முஸ்லிம் கட்சிகளும் இப்போது சிந்திக்கத் தொடங்கியுள்ளன.

அதைவிடுத்து, மாறி மாறி தேர்தல் வருவதாலும். ஆட்சியாளர்கள் மாறுவதாலும், திருத்தங்கள் கொண்டு வரப்படுவதாலும் மூவின மக்களது வாழ்விலும் உருப்படியான முன்னேற்றம் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

நெருக்கடியான நிலையில் நாட்டை பொறுப்பேற்ற ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை தவிர்த்துப் பார்த்தால், 2010, 2015, 2019 தேர்தல்களின் ஊடாக மக்கள் ஆணையைப் பெற்றவர்கள் தேசிய ரீதியில் சமூக, பொருளாதார விடங்களில் அடைந்த சாதனை என்னவென்று கூறமுடியும்?

பெரும்பான்மை அரசியல்வாதிகளை விடுங்கள், நமது முஸ்லிம் அரசியல்வாதிகள், தலைவர்கள் தமது பதவிக்காலத்தில் எதனைச் சாதித்திருக்கின்றார்கள்? நான்கு ஐந்து தடவை பாராளுமன்றத்திற்குத் தெரிவான முஸ்லிம் எம்.பிக்கள் உள்ளனர். இரு தசாப்தங்களாக தலைவர் பதவியில் அகலக்கால் போட்டு உட்கார்ந்திருப்பவர்கள் உள்ளனர்.

பிராந்திய தளபதிகள், ஊர்க் காவலர்கள், சமூகப் போராளிகள் என்று படம் காட்டுபவர்களும் ஏராளம் பேர் உள்ளனர். ஆனால், இவர்கள் தமது பதவிக்காலத்தில் மக்களுக்காகச் செய்த சாதனைகள், தீர்த்து வைத்த பிரச்சினைகளின் விபரங்கள் அடங்கிய முன்னேற்ற அறிக்கையைச் சமர்ப்பிக்க முடியாத நிலையிலுள்ளனர்.

கிட்டத்தட்ட இதே நிலையில்தான் தமிழர் அரசியலும் உள்ளது. இனப் பிரச்சினை, தீர்வுத் திட்டம், 13ஆவது திருத்த அமுலாக்கம், சமஷ்டி என்று பேசிப் பேசியே காலம் கழிந்துள்ளது. தமிழர் பிரச்சினையைச் சர்வதேச மயப்படுத்தியமை, காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை என்ற பல விடயங்களைத் தமிழ்த் தேசிய அரசியல் அடைந்திருக்கின்றது.

ஆனால், அரசாங்கங்களை இந்தளவுக்கு எதிர்த்து அரசியல் செய்யாமலேயே இதனைச் சாதித்திருக்கலாம். அப்படிப் பார்த்தால் ஏதோ ஒரு விம்பத்தைக் காட்டி தமிழ்த் தேசிய அரசியலும் மக்களைப் போக்கு காட்டிக் கொண்டுள்ளதாகவும் கருத இடமுள்ளது.

இந்த இலட்சணத்தில் மலையக அரசியல் பற்றிச் சொல்லத் தேவையில்லை. அந்த மக்கள் எந்தளவுக்கு பேய்க்காட்டப்படுகின்றார்கள் என்பதற்கு, அண்மையில் பொங்கல் நிகழ்வுக்கு இந்திய நடிகைகளை அழைத்து வந்து கும்மாளமிட்டமை ஒரு பதச் சோறாகக் கொள்ளப்படலாம்.

இப்படியான பெருந்தேசிய அரசியல்வாதிகளும் தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகளும் அடுத்த சுற்று ஏமாற்று நாடகத்திற்கு இப்போது தயாராகிக் கொண்டிருக்கின்றார்கள். அதற்கு நமது நாட்டில் தேர்தல் என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.



## வாழ்வியல் தரிசனம்

யாவருக்கும் சுயபுத்தி உண்டு. வாழ்க்கையில் புது,புது அனுபவங்களூடாக வருகின்ற பகுத்தறிவை, மிகவும் நுட்பமாகப் பொருத்தமான இடங்களில் பிரயோகிப்பதே சுய புத்தியாகும்.

எல்லா விஷயங்களையும் சொல்லிக் கொடுத்தபடி இருக்க முடியாது. பல விடயங்களை நாங்கள் தேட வேண்டியுள்ளது.

மேலும் தனது முழு முயற்சியுடன் நல்ல முடிவை அறிவதே மகிழ்ச்சிகரமானது. கால மாற்றங்கள் அறிவை, அதன் தேவைகளை எமக்கு உணர்த்தியே தீரும்.

அச்சப்படுவதால் மனிதன் முடிவை எடுக்கத் தயங்குகின்றான். தோல்விகளால் மனிதன் எழுவது எப்படி என உண்மையைத் தனது சுய அனுபவத்தால் அறிந்து கொள்கின்றான்.

உலகில் பல அச்சரியங்கள் நடந்த வண்ணம் இருக்கின்றன. அத்துடன் பேரழிவுகள், யுத்தங்கள், பஞ்சம் என பல இடர்களைச் சந்திக்காமல் இருக்கமுடியாது. உலகம் முழுவதிலும் எதுவும் நடக்கலாம். இவற்றைக் கடந்து செல்வதே மனித வாழ்க்கை. சக்தி, துணிவுடன் இயங்குக.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### நூலகர் வெற்றிடங்களை நிரப்புக


கிழக்கு மாகாண நூலகங்களில் நிலவும் நூலகர் தரம் 3 இற்கான வெற்றிடங்களை நிரப்புமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

> **மத்திய அரசாங்கத்தினால் நூலகர் நியமனம் வழங்கப்பட்டு வருகின்ற நிலையில், கிழக்கு மாகாணத்தில் நிலவும் நூலகர் தரம் 3 இற்கான நியமனம் நீண்ட காலமாக வழங்கப்படவில்லை**

இவ்விடயத்தை கிழக்கு மாகாண உள்ளூராச்சி ஆணையாளர் ஊடாக முதலமைச்சின் செயலாளர், ஆளுநர் ஆகியோர்களின் கவனத்திற்கு கிழக்கு மாகாண நூலகப் பணியாளர் ஒன்றிய உப தலைவர் ஏ.ஏ.கமால்டீன் தெரியப்படுத்தியுள்ளார்.

மத்திய அரசாங்கத்தினால் நூலகர் நியமனம் வழங்கப்பட்டு வருகின்ற நிலையில், கிழக்கு மாகாணத்தில் நிலவும் நூலகர் தரம் 3 இற்கான நியமனம் நீண்ட காலமாக வழங்கப்படவில்லை. இதேவேளை, அந்த விடயத்தை சுட்டிக்காட்டி நூலகர் நியமனத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உப தலைவர் சம்பந்தப்பட்டோர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

- எச்.எம்.எம்.பர்ஸான்



# சந்திப்புக்கு பணம் கேட்கும் நடிகர்

ஹிந்தி திரையுலகின் முன்னணி இயக்குநர் மற்றும் தயாரிப்பாளரான அனுராக் காஷ்யப் தமிழில் நயன்தாரா நடித்த ‘இமைக்கா நொடிகள்’ என்ற படத்தில் வில்லனாக நடித்துள்ளார். விரைவில் இவர் ஜிவி பிரகாஷ் நடிக்க இருக்கும் படத்தை இயக்க இருப்பதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், திடீரென அனுராக் காஷ்யப் தனது இன்ஸ்டாகிராமில் ஒரு சர்ச்சைக்குரிய பதிவை செய்துள்ளார். அந்த பதிவில் ’சினிமா சம்பந்தமாக என்னை யாராவது சந்திக்க வந்தால் அவர்கள் பணம் செலுத்த வேண்டும், 10 முதல் 15 நிமிடங்கள் என்றால் ஒரு இலட்ச ரூபாய், 30 நிமிடங்கள் என்றால் 2 இலட்சம் ரூபாய், ஒரு மணி நேரம் என்றால் 5 இலட்சம் ரூபாய் பணம் கொடுக்க வேண்டும், அந்த பணத்தை முன்கூட்டியே கொடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். பல சந்திப்புகள் தனது நேரத்தை வீணடித்து விட்டதாகவும், சினிமா சம்பந்தமாக தன்னை சந்திக்க வருபவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் சில படங்களை ஊக்குவித்தாக அவர் கூறியுள்ளார்.

ஆனால், தன்னை ஜீனியஸ் என்று நினைத்துக் கொண்டு வருபவர்களிடம் இனி தனது நேரத்தை இலவசமாக செலவழிக்க விரும்பவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த பதிவு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.






# அண்ணாத்தை ஆடுறார்


தமிழ் திரை உலகில் உள்ள முன்னணி நடன இயக்குநர்கள் பலர் கமல்ஹாசனுடன் இன்றும் நெருங்கிய நட்பில் இருக்கிறார்கள். பிரபுதேவா, ராஜு சுந்தரம் ஆகியோரின் தந்தையான டான்ஸ் மாஸ்டர் சுந்தரம், கமல்ஹாசனின் நெருங்கிய நண்பர் ஆவார்.

இந்த நிலையில், டான்ஸ் மாஸ்டர் சுந்தரத்துடன் ஒற்றை காலில் நின்றபடி எடுத்த புகைப்படத்தை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் கமல்ஹாசன் பகிர்ந்து உள்ள நிலையில், அந்த புகைப்படம் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

இது தொடர்பில் கமல்ஹாசன் கூறியதாவது, “அண்ணாத்தை ஆடுறார், அபூர்வ சிங்கீதம், நிகழ்ச்சிக்கு வந்திருந்த சுந்தரம் மாஸ்டருடன் ஒற்றைக் காலில் நின்று ஒரு போட்டோ எடுத்துக்கொண்டேன்” என குறிப்பிட்டுள்ளார்.

# ஜீவி படங்கள் அடுத்தடுத்து வெளியீடு





ஜிவி பிரகாஷ் நடிப்பில் நிகேஷ் இயக்கத்தில் உண்மை சம்பவத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட ‘ரெபெல்’. என்ற படம் வெளியாகி உள்ளது.

இதனையடுத்து, ஒளிப்பதிவாளர் பி.வி.சங்கரின் இயக்கத்தில் ஜி.வி.பிரகாஷ் நடிப்பில் வெளியாக இருக்கும் படம் ‘கள்வன்’.

பாரதிராஜா, இவானா மற்றும் தீனா முன்னணி கதாப்பாத்திரங்களில் நடித்துள்ளனர். இப்படம் ஏப்ரல் 4 வெளியாகவுள்ளது.

இந்நிலையில், ஜி.வி.பிரகாஷ் அடுத்ததாக நடித்திருக்கும் படம் ‘டியர்’. ஆனந்த் ரவிசந்திரன் இந்த படத்தை இயக்கி இருக்கிறார். ஐஷ்வர்யா ராஜேஷ் இந்த படத்தில் கதாநாயகியாக நடித்துள்ளார்.

மனைவி குறட்டை சத்தத்தினால் அவதிப்படும் கணவனை மையமாக வைத்து எடுக்கப்பட்டுள்ள இந்த படத்துக்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

‘டியர்’ படம் வரும் ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி வெளியாகவுள்ளது. ஜிவி பிரகாஷிற்கு அடுத்தடுத்த படங்கள் வெளியாக உள்ளதால், ரசிகர்கள் உற்சகத்தில் உள்ளனர்.

# ஹோலியை கொண்டாடும் ரம்யா

கவர்ச்சி போட்டோஷூட் மூலம் ஓவர் நைட்டில் சோசியல் மீடியாக்களில் அதிகம் பேசப்பட்டவர் நடிகை ரம்யா பாண்டியன். இதனைத்தொடர்ந்து இவர் தனது வீட்டு மொட்டைமாடியில் எடுக்கப்பட்ட போட்டோஷூட்டை ரம்யா சோசியல் மீடியாக்களில் பதிவிட்ட சில மணி நேரங்களில் ஒட்டுமொத்த தமிழ் சினிமாவையும் திரும்பிப் பார்க்க வைத்துவிட்டார்.

இளைஞர்களின் மனதைக் கொள்ளையடித்த ரம்யா பாண்டியனுக்கு இதன் மூலம் சினிமா வாய்ப்புகள் தேடி வந்தது. கடந்த 2015இல் ‘டம்மி பட்டாசு’ திரைப்படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் ஹீரோயினாக என்ட்ரி கொடுத்தார்.

இதற்கமைய தற்போது நடிகை ரம்யா பாண்டியன் வண்ணங்களின் திருவிழாவான ஹோலியை கொண்டாடும் புகைப்படங்களைத் தனது சமூக வலைத்தளங்களில் பகிர்ந்துள்ள நிலையில் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளார்.






# வித் மை தளபதி

வெங்கட் பிரபு இயக்கத்தில் நடிகர் விஜய் நடித்து வருகிறார். யுவன் ஷங்கர் ராஜா இப்படத்திற்கு இசையமைத்துள்ளார்.

அண்மையில் கோட் படத்தின் படப்பிடிப்பு கேரளாவின் திருவனந்தபுரத்தில் நடைபெற்றது. அவர் கேரளாவில் காலடி எடுத்து வைத்ததிலிருந்து ரசிகர்கள் அவரை சூழ்ந்து கொண்டனர்.

அவர்களின் அன்பைப் பெற்ற விஜய், நேரம் கிடைக்கும் போதெல்லாம் ரசிகர்களைச் சந்தித்து வந்தார். கேரளாவில் இருந்து கிளம்புவதற்கு முன்பு கூட கேரள ரசிகர்களை விஜய் சந்தித்துப் பேசினார்.

படப்பிடிப்பை முடித்து விட்டு விஜய் மற்றும் படக்குழு சென்னை திரும்பினர். அடுத்த கட்டமான படப்பிடிப்பை ரஷ்யாவின் தலை நகரமான மாஸ்கோவில் படம்பிடிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

இந்த நிலையில், வெங்கட் பிரபு இன்ஸ்டாகிராம் பக்கத்தில் புகைப்படம் ஒன்றை வெளியிட்டுள்ளார். இந்த புகைப்படத்துடன், விஜய்யுடன் எடுத்துக் கொண்ட புகைப்படத்தை பகிர்ந்துள்ளார். இப்புகைப்படம் ரசிகர்களின் மத்தியில் வைரலாக பரவி வருகிறது.




# சான்றிதழ்கள் வழங்கி வைப்பு



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சாய்ந்தமருது பயிற்சி நிலையத்தில் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் வைபவம், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண பணிப்பாளர் எச்.யூ.சுசந்தவின் தலைமையில், தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாக தொழில்நுட்பவியல் பீட கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை (24) நடைபெற்றுள்ளது.
இதன்போது தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம் மற்றும் சிங்களம் உள்ளிட்ட கற்கை நெறிகளை பூர்த்திசெய்த 300 மாணவர்களுக்கு சான்றிதல்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

–எம்.எஸ்.எம்.ஹனீபா





# செயலாளர் விஜயம்

பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமின் அழைப்பின் பேரில், சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பாலித மஹிபால, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தன உள்ளிட்ட உயர்மட்ட குழுவினர் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கள விஜயமொன்றை சனிக்கிழமை (23) மேற்கொண்டுள்ளனர் .
சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் சீன அரசின் சுமார் ஆயிரம் மில்லியன் ரூபாய் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு, முடிவுறும் தறுவாயிலுள்ள மூன்று மாடிக் கட்டடத் தொகுதியை இவர்கள் பார்வையிட்டதுடன் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் எதிர்கால அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடியுள்ளனர்.

–அஸ்லம் எஸ்.மௌலானா


# பங்குனி உத்தர தீர்த்தோற்சவம்




வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பங்குனி உத்தர உற்சவத்தின் முத்துச் சப்பர பவனி மற்றும் தீர்த்தோற்சவம் ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (24) நடைபெற்றுள்ளது.

–வி.ரி.சகாதேவராஜா





# 122ஆவது சிறப்பு விழா



மலையகத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க சிவ ஆலயங்களில் ஒன்றான கெட்டபுலா குயின்ஸ்பேரி தோட்டத்தில் அமைந்துள்ள நவநாதர் சித்தர் சிவ ஆலயத்தில் 122வது வருடாந்த பங்குனி உத்திரம் சிறப்பு விழா ஞாயிற்றுக்கிழமை (24) இடம்பெற்றது. நவநாதர் சித்தர் 24.03.1902 ஆம் ஆண்டு சமாதியடைந்துள்ளதுடன் அதே தினத்தில் இம்முறை 24.03.2024 ஞாயிற்றுக்கிழமை பங்குனி உத்திரம் விழாவும் சித்தர் சமாதியில் எழுந்தருளிய சிவலிங்கத்துக்கு விசேட பூஜைகளும் இடம்பெற்றுள்ளது .
அத்துடன் இந்த சிவாலயத்தின் பகுதியாக அமைந்துள்ள ஒரே கல்லில் உருவம் கொண்டுள்ள வள்ளி, தெய்வானை சமேதர முருகனுக்கு பால்குட பவனி மற்றும் பறவை காவடி ஊர்வலமும் இடம்பெற்றுள்ளது .

– ஆ.ரமேஸ்



மாலே

# “பிடிவாதம் வேண்டாம்; இந்தியாவுடன் பேசுங்கள்”

சீன ஆதரவாளராக அறியப்படும் முகமது முய்சு, மாலத்தீவின் ஜனாதிபதியாக பதவியேற்றதையடுத்து, இந்தியா-மாலத்தீவு உறவில் விரிசல் ஏற்படத் தொடங்கியது. அந்நாட்டு மந்திரிகள் இந்திய பிரதமர் மோடியை விமர்சித்தனர்.

மாலத்தீவின் விமான தளங்களில் உள்ள இந்திய இராணுவம் உடனடியாக வெளியேற வேண்டும் என ஜனாதிபதி முய்சு கெடு விதித்தார். அதன்படி இந்திய இராணுவத்தின் முதல் குழுவினர் நாடு திரும்பினர். எஞ்சியுள்ள வீரர்கள் மே 10ஆம் திகதிக்குள் வெளியேறுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதுபோன்ற காரணங்களால் இரு நாடுகளுக்கிடையிலான உறவில் மேலும் விரிசல் ஏற்பட்டது. மாலத்தீவு செல்லக்கூடிய இந்தியச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்தது.

இதற்கிடையே, மாலத்தீவுக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளதால், இந்தியா கடன் நிவாரணம் வழங்க வேண்டும் என ஜனாதிபதி முய்சு சமீபத்தில் ஒரு பேட்டியில் கூறியிருந்தார். மாலத்தீவுக்கு மிகப்பெரிய உதவி வழங்குவதில் இந்தியா பெரிய பங்கு வகித்ததாகவும், அதிக அளவிலான திட்டங்களைச் செயல்படுத்தியதாகவும் கூறிய அவர், மாலத்தீவின் நெருங்கிய நட்பு நாடாக இந்தியா தொடர்ந்து இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

இந்த சூழ்நிலையில், மாலத்தீவு ஜனாதிபதி முகமது முய்சு பிடிவாதமாக இருப்பதை விட்டுவிட்டு, நிதிச் சவால்களைச் சமாளிக்க அண்டை நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி இப்ராஹிம் முகமது சோலிஹ் கூறியுள்ளார்.

நியூயோர்க்

## இந்திரா நூயி வேண்டுகோள்

பெப்சி நிறுவனத்தின் தலைவராக இருந்தவர் இந்திரா நூயி (68). இவர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர். வர்த்தக உலகில் மிகவும் செல்வாக்கு மிக்க அதிகாரிகளில் ஒருவராக இருந்தார். அவர் இந்திய மாணவர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.



இந்திய மாணவர்கள் அமெரிக்காவில் சில பிரச்சினைகளில் சிக்குவது தொடர்பாக ஊடகங்களில் வரும் செய்திகளைப் பார்க்கிறேன். ஏற்கெனவே அமெரிக்கா வந்து படிக்கும் இந்திய இளைஞர்கள் அல்லது இனிமேல் அமெரிக்கா வர நினைக்கும் இந்திய இளைஞர்களுக்கு ஒன்று சொல்கிறேன். இங்கு வந்த பிறகு உள்ளூர் சட்டத்தை மதித்து நடந்து கொள்ளுங்கள். போதை பொருட்கள் விடயத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருங்கள் என தெரிவித்துள்ளார்.

ரஷியா



ரஷியாவில் ஒரு நாள் முழுவதும்

## அரை கம்பத்தில் பறந்த தேசிய கொடி

ரஷியாவில் இசை அரங்கில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக, அனைத்து அரசு கட்டிடங்களிலும் ஞாயிற்றுக்கிழமை (24) ஒரு நாள் முழுவதும் தேசிய கொடி அரை கம்பத்தில் பறந்தன.

ரஷியாவின் தலைநகர் மாஸ்கோவில் இருந்து மேற்கு பகுதியில் குரோகஸ் சிட்டி ஹால் இசை அரங்கத்தில், வெள்ளிக்கிழமை(22) இரவில் பிக்னிக் என்ற பிரபல இசைக்குழு ஒன்றின் இசை நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது.

இசை நிகழ்ச்சியில் கிறிஸ்தவர்கள் பலர் திரளாக பங்கேற்றிருந்த நிலையில், அரங்கிற்குள் திடீரென புகுந்த ஆயுதமேந்திய மர்ம கும்பல் அதிரடியாக தாக்குதலில் ஈடுபட்டது. இதில், இசை அரங்கத்தின் மேற்கூரை இடிந்து விழுந்தது. புகை அரங்கம் முழுவதும் பரவியது.

இந்த தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 137 ஆக உயர்ந்து உள்ளது. அவர்களில் 3 பேர் குழந்தைகள் ஆவர். 182 பேர் காயமடைந்தனர். 100 பேர் இன்னும் சிகிச்சை பெற்று வருவதுடன், அவர்களில் பலரின் நிலைமை கவலைக்குரிய வகையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

வொஷிங்டன்

## “முன்கூட்டியே எச்சரித்திருந்தோம்”



ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் நடந்த தீவிரவாதத் தாக்குதலில் 60 பேர் உயிரிழந்துள்ள நிலையில், இத்தாக்குதல் தொடர்பாக முன்கூட்டியே ரஷ்ய அதிகாரிகளை எச்சரித்திருந்ததாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க தேசிய பாதுகாப்பு கவுன்சில் செய்தித் தொடர்பாளர் ஆண்ட்ரெய் வாட்சன் கூறுகையில், “இம்மாதத் தொடக்கத்திலேயே மாஸ்கோவில் ஒரு திட்டமிட்ட தாக்குதல் நடத்த சதி செய்யப்படுவதாகவும், குறிப்பாக இசை நிகழ்ச்சியை குறிவைத்து சதி செய்யப்படுவதாகவும் ரஷ்ய அதிகாரிகளுக்கு அமெரிக்க அரசு தகவல் அளித்தது.

ஜனாதிபதி ஜோ பைடனின் உத்தரவின்படி, தீவிரவாத சதிச் செயல்களைப் பற்றி பகிர்வதை கடமையாகக் கொண்டு அமெரிக்கா செயல்பட்டு வருகிறது. அதன்படியே ரஷ்ய அதிகாரிகளுக்கும் நாங்கள் எச்சரிக்கை விடுத்திருந்தோம்” என்றார்.

செய்யாறு

## மாணவி கர்ப்பம்: வாலிபருக்கு வலை

காஞ்சீபுரம் மாவட்டம் வாலாஜாபாத் தாலுகா நெய்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த வாலிபர் ஒருவர், திருவண்ணாமலை கிராமத்திலுள்ள தனது உறவினர் வீட்டில் நடைபெற்ற புதுமனை புகுவிழாவுக்கு சென்றுள்ளார்.



அங்கு வந்திருந்த, செய்யாறு அருகே உள்ள ஒரு கிராமத்தை சேர்ந்த 10ஆம் வகுப்பு மாணவி ஒருவர், இரவு உறங்கிக் கொண்டிருந்த வேளையில், குறித்த வாலிபர் அவரை மிரட்டி பாலியல் வன்புணர்வு செய்ததாக கூறப்படுகிறது.

பின்னர் மாணவிக்கு ஏற்பட்ட உடல்நலக்குறைவால் செய்யாறு அரசு மருத்துவமனைக்கு சென்று பரிசோதனை செய்தபோது, மாணவி கர்ப்பமாக இருப்பது தெரிய வந்துள்ளது. இதனால் அதிர்ச்சி அடைந்த பெற்றோர் விசாரித்த போது நடந்ததை மாணவி தெரிவித்துள்ளார். இதனையடுத்து, அந்த வாலிபரை வலை வீச தேடி வருகின்றனர்.

சென்னை

## 28 வரை ‘ஹீட்’



தமிழகத்தில் எதிர்வரும் 28ஆம் திகதி வரை ஓரிரு இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை, வழக்கத்தைவிட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயரக்கூடுமென சென்னை வானிலை ஆய்வு மையம் எதிர்வுகூறியுள்ளது.

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் மார்ச் 30ஆம் திகதி வரை வறண்ட வானிலை நிலவக்கூடும் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.



முதலாவது டெஸ்டில்

# பங்களாதேஷை வீழ்த்தியது இலங்கை

பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது டெஸ்டை இலங்கை வென்றது. இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், சியல்ஹெட்டில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான இப்போட்டியின் நேற்றைய நான்காம் நாளை தமது இரண்டாவது இனிங்ஸில் 5 விக்கெட்டுகளை இழந்து 47 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த பங்களாதேஷ் கசுன் ராஜித (4), லஹிரு குமாரவிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 182 ஓட்டங்களையே பெற்று 328 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. மொமினுல் ஹக் ஆட்டமிழக்காமல் 87, மெஹிடி ஹஸன் மிராஸ் 33 ஓட்டங்களைப் பெற்றனர்.

இப்போட்டியின் நாயகனாக தனஞ்சய டி சில்வா தெரிவானார்.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

இலங்கை: 280/10 (துடுப்பாட்டம்: தனஞ்சய டி சில்வா 102, கமிந்து மெண்டிஸ் 102 ஓட்டங்கள். பந்துவீச்சு: காலிட் அஹ்மட் 3/72, நஹிட் ரானா 3/87, தஜியுல் இஸ்லாம் 1/31, ஷொரிஃபுல் இஸ்லாம் 1/59)

பங்களாதேஷ்: 188/10 (துடுப்பாட்டம்: தஜியுல் இஸ்லாம் 47, லிட்டன் தாஸ் 25 ஓட்டங்கள். பந்துவீச்சு: விஷ்வ பெர்ணாண்டோ 4/48, லஹிரு குமார 3/31, கசுன் ராஜித 3/56)

இலங்கை: 418/10 (துடுப்பாட்டம்: கமிந்து மெண்டிஸ் 164, தனஞ்சய டி சில்வா 108, திமுத் கருணாரத்ன 52, பிரபாத் ஜெயசூரிய 25 ஓட்டங்கள். பந்துவீச்சு: மெஹிடி ஹஸன் மிராஸ் 4/74, தஜியுல் இஸ்லாம் 2/75, நஹிட் ரானா 2/128, காலிட் அஹ்மட் 1/46, ஷொரிஃபுல் இஸ்லாம் 1/75)

பங்களாதேஷ்: 182/10 (துடுப்பாட்டம்: மொமினுல் ஹக் ஆ.இ 87, மெஹிடி ஹஸன் மிராஸ் 33 ஓட்டங்கள். பந்துவீச்சு: கசுன் ராஜித 5/56, விஷ்வ பெர்ணாண்டோ 3/36, லஹிரு குமார 2/39) போட்டியின் நாயகன்: தனஞ்சய டி சில்வா.

## மிலனிலிருந்து வெளியேறும் மைக்னன்

இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஏ.சி மிலனின் கோல் காப்பாளரான மைக் மக்னனை ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச், இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சி ஆகியன வட்டமிடுகின்றன.

இந்நிலையில் 2026ஆம் ஆண்டு வரையில் மிலனுடன் ஒப்பந்தத்தைக் கொண்டுள்ள 28 வயதான மைக்னனைத் தக்க வைக்க அவரின் ஆண்டொன்றுக்கான 5.5 மில்லியன் யூரோக்கள் ஊதியத்தை இரட்டிப்பாக்கவும், அவரின் பெறுமதியை 100 மில்லியன் யூரோக்களாக மிலன் மதிப்பிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.





ஐ.பி.எல்:

## மும்பையை வென்றது குஜராத்

இந்தியன் பிறீமியர் லீக் (ஐ.பி.எல்) தொடரில், அஹமதாபாத்தில் ஞாயிற்றுக்கிழமை(24) நடைபெற்ற மும்பை இந்தியன்ஸுடனான போட்டியில் குஜராத் டைட்டான்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மும்பை

குஜராத்: 168/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: சாய் சுதர்ஷன் 45 (39), ஷுப்மன் கில் 31 (22) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜஸ்பிரிட் பும்ரா 3/14 [4], ஜெரால்ட் கொயட்ஸி 2/27 [4])

மும்பை: 162/9 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: டெவால்ட் பிறெவிஸ் 46 (38), றோஹித் ஷர்மா 43 (29) ஓட்டங்கள். பந்துவீச்சு: சாய் கிஷோர் 1/24 [4], மோஹித் ஷர்மா 2/32 [4])

போட்டியின் நாயகன்: சாய் சுதர்ஷன்

இதேவேளை, ஜெய்ப்பூரில் நடைபெற்ற மற்றைய போட்டியில் லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸை ராஜஸ்தான் றோயல்ஸ் வென்றிருந்தது.

இந்நிலையில், சென்னையில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் டைட்டான்ஸை நடப்புச் சம்பியன்களான சென்னை சுப்பர் கிங்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.



## ஹரிஸ் றாஃப்புக்கு மீண்டும் ஒப்பந்தம்

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில், பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சாளர் ஹரிஸ் றாஃப்பின் ஒப்பந்தம் மீள வழங்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கான பாகிஸ்தானின் டெஸ்ட் சுற்றுப்பயணத்தில் பங்கெடுக்க மறுத்தமைக்கான ஒழுக்காற்று நடவடிக்கைகளையடுத்தே 30 வயதான றாஃப்பின் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

## ஓய்விலிருந்து வந்தார் ஆமிர்

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தானுக்குத் தெரிவு செய்யும் பொருட்டு தன்னை அவ்வணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான மொஹமட் ஆமிர் தயாராக்கியுள்ளார்.

இறுதியாக கடந்த 2020ஆம் ஆண்டே பாகிஸ்தானுக்காக விளையாடிய 31 வயதான ஆமிர் அவ்வாண்டு சர்வதேசக் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றிருந்தார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 26, மார்ச் 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.